பகுதிகள் மற்றும் மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் தரம் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுகின்ற வகையில், நிதித் துறையின் ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல அறிவிப்புகளை அறிவிப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

156—

மணிமண்டபம்

***13868—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சி, காப்புக்காடு சந்திப்பில் தொல்காப்பியருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சி, காப்புக்காடு சந்திப்பில் தொல்காப்பியருக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

முற்பகல் 11–10

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, விளாத்துறை ஊராட்சியில் உள்ள காப்புக்காடு என்ற ஊரில் தொல்காப்பியர் பிறந்துள்ளார் என்று ஆய்வுகள் நிரூபிக்கின்றன. இவர் தமிழுக்கு முதன் முதலாக இலக்கணம் எழுதிய தமிழ்ப் புலவர். இவர் எழுதிய தொல்காப்பியம் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் நூல். இவருடைய நூலில் கன்னியாகுமரி மாவட்ட வழக்கு மொழிகள் மிளிருகின்றன. 'பட்டி' என்ற சொல் வருகிறது. 'பட்டி' என்னும் சொல் குமரியில் நாயைக் குறிக்கும். பூனைக்கு 'பூச்சை', ஆண் குட்டிகளுக்கு 'கடுவன்' என்பவை நாங்கள் பயன்படுத்தும் வட்டார வழக்கு மொழியாகும். இதுபோன்று 'வெள்ளம்' என வருகிறது; 'வெள்ளம்' என்பது தண்ணீரைக் குறிக்கும். 'மேவுதல்' என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறார். எனவே, 'மேவுதல்' என்றால், விரும்புதல் என்று பொருள்படும். எங்கள் மாவட்டத்தில் அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய இதுபோன்ற வழக்கு மொழியைத்தான் அவர் நூலில் அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறார். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தொல்காப்பியர் பிறந்தார் என்று என்னால் அறுதியிட்டுக் கூறமுடியும். காப்புக்காடு ஊரில் காப்புக்காடு* R.C. *பள்ளிக்கூடத்திற்கு கிழக்குப் பக்கம் காப்புக்காடு வருவாய்க்கிராமம்* R.S.No.405/10*–ல் 10½ சென்ட் நிலத்தை ஊராட்சி தீர்மானம் இயற்றி இதற்காக வழங்கியுள்ளது.* மேலும் R.S.No.405/13*–ல் 3/4 சென்ட் நிலத்தை, வழிப்பாதையாக தனியார் பட்டா நிலத்தினை திரு. வில்லியம் என்பவர் அரசுக்குத் தானமாக இந்த மணிமண்டபம் கட்டுவதற்காகத் தந்துள்ளார். அந்த இடத்தில் தமிழ்ப் புலவர் தொல்காப்பியருக்கு நினைவு மண்டபம் கட்டி, அகநூல் தொல்காப்பியருக்கு சிலை வைக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் பத்மநாபன், இலக்குவனார், டாக்டர் சாமுவேல்தாசன் ஆகிய நிகழ்கால வரலாற்று ஆய்வாளர்கள், புலவர்களின் கருத்தின் அடிப்படையில் காப்புக்காடு ஊரில் தொல்காப்பியர் நினைவு மண்டபம் கட்டுவது சாலச்சிறந்தது. குழித்துறை தாமிரபரணி ஆற்றின் மேற்கு பக்கம் அதங்கோட்டாசான் சிலை முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நிறுவப்பட்டு பராமரிக்கப்படுகிறது.*

2017 ஜூலை 7]

விளவங்கோடு தொகுதியில் படந்தாலுமூடு அருகில் பனம்பழிஞ்சி ஊரில் பிறந்த பனம்பாரனார் மிகச் சிறந்த தமிழ்ப் புலவர். தொல்காப்பியர், அதங்கோட்டாசான், பனம்பாரனார் ஆகிய மூவரும் அகத்திய மாமுனிவரின் சீடர்கள். தொல்காப்பியம் நூலை அதங்கோட்டாசான் தலைமையில் மதுரை தமிழ்ச் சங்கத்தில் வைத்து தொல்காப்பியர் அரங்கேற்றினார். எனவே, இத்தனை சிறப்புமிக்க தமிழ்ப் புலவர் தொல்காப்பியர் அவர்கள் பிறந்த இடம் இந்த காப்புக்காடு என்ற ஊர். எனவே, இந்த இடத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இது மானியக் கோரிக்கை இல்லை; கேள்வி நேரம்.*

திருமதி எஸ். விஜயதரணி: *முடித்துவிடுகிறேன். இந்த ஊரில் அவருக்கு சிலையோடு சேர்த்து ஒரு மணிமண்டபம் நிறுவுவது சாலச் சிறந்தது. எனவே, அதனை நிறைவேற்றிட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழி, இனம், பண்பாடு, கலாச்சாரம் காத்த பெருமைக்குரியவர்களுக்கு பெருமையையும், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுக்கு சிறப்பையும், நாட்டு விடுதலைக்கு வித்திட்ட, வீரமரணம் அடைந்த தியாக சீலர்களுக்கு மாண்பையும் வழங்கியதிலே, தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முதலமைச்சராக வரலாறு படைத்து வாழ்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்று வரலாறாய் வாழ்ந்துகொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் தொல்காப்பியரைப் பற்றிச் சிறப்பாகச் சொன்னார்கள். தொல்காப்பியம் தமிழின் மூத்த இலக்கணம் ஆகும். முதன்மையான இலக்கணமாம், முன்னை பழமைக்கும் பழமையாகவும், பின்னை புதுமைக்கும் புதுமையாகவும் திகழும் தொல்காப்பியம் என்னும் இலக்கிய வளம் நிறைந்த இலக்கண நூலைத் தந்தவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் என்றவுடனே

பழமையான காப்பியம் என பொருள்கொள்வோர் சிலரும் உள்ளனர். தொல்காப்பியர் அந்நூலை இயற்றிய காலத்தில் அது புதிய நூலாகத்தானே இருந்திருக்கும். பிறகெப்படி தொல்காப்பியம் என கேட்போர் சிலரும் உண்டு. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட இந்த நூல், அதற்கும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வழக்கில் இருந்த வாழ்வியலின் வலுவில்லா பழமையைக் காப்பதற்காக உருவானதாகும். தொல்+காப்பு+இயம் என்பதே தமிழறிஞர்களின் முடிவாகும். அதனாலேயே நூல் ஆசிரியர் தொல்காப்பியர் என்ற பெயரைப் பெற்றார். தொல்காப்பியரின் நூல் நோக்கம் மனித வள மேம்பாடு ஒன்றுதான். அதற்கு பொருள் வேண்டும். பொருள் என்றால் பணம் அல்ல. வாழ்வியலின் பொருளை அறிதலாகும். பொருளை உணரச் சொல் வேண்டும். சொல் உருவாக எழுத்து வேண்டும். எனவேதான், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்கள் கொண்டு 1610 நூற்பாக்கள் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. ஒருவருக்குப் பெருமிதம், எந்த நான்கு சிறப்புகளால் வந்து சேரும் என்பதைப் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியலில் 1203–வது நூற்பாவில் தொல்காப்பியர் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

‘கல்விதருகன் இசமை கொடை என சொல்லப்பட்ட பெருமிதம் நான்கு’. கல்வியாலும், தருகன் எனும் அஞ் சாது செயலாற்றும் நெஞ்சுரத்தாலும், நற்செயல்களால் வந்து சேரும் புகழினாலும், வரையாது வாரி வழங்கும் வள்ளல் தன்மையாலுமே பெருமிதம் வரும் என்ற தொல்காப்பியரின் சொல்லை மெய்ப்பித்து, தொல்காப்பியரின் நூல் போலவே வாழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அப்படிப்பட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே சட்டப் பேரவையிலே 14–5–2013 அன்று 110 விதியின்கீழ், “பேரறிஞர் அண்ணா அவர்களால் 1968 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உலகத் தமிழ் மாநாட்டின்போது அறிவிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழர்தம் வாழ்க்கை வளத்தை எடுத்துக்கூறும் தொல்காப்பியத்தின் பெயரால் ஆய்வு இருக்கை ஏற்படுத்தப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று அறிவித்தார்கள். அறிவித்ததோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி

சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில், தொல்காப்பியர் பெயரில் ஆய்வு இருக்கை நிறுவிட ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக அரசின் சார்பில் வைப்பு நிதியாக 50 இலட்சம் ரூபாயை வழங்கி சிறப்பித்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களுக்கு இந்த மாமன்றத்திலே மலரும் நினைவுகளாக, ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அம்மா அவர்களைப்பற்றி 4–5–2012 அன்று பேசிய நேரத்திலே இதே சட்டமன்றப் பேரவையிலே நானும் மாமன்ற உறுப்பினராக இருந்தேன். அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உறுப்பினரின் மாவட்டமான கன்னியாகுமரியிலே தமிழ் தொண்டாற்றிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்குச் சிலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பை அறிவித்ததற்காக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள், "கன்னியாகுமரி மாவட்டத்திலே தமிழ் தொண்டாற்றிய என்னுடைய கொள்ளுத் தாத்தா கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். அவர் என்னுடைய கொள்ளுத் தாத்தா; நான் அவருடைய கொள்ளுப் பேத்தி. இதுகுறித்து எங்கள் ஊரில் எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு எனக்கு பெரிய இன்ப அதிர்ச்சியாக இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் கேட்கவே இல்லை. ஆனால், அவரே கொடுத்திருக்கின்றார். 'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்று பாடியவர் அவர். அவர்களின் கூற்றிற்கேற்ப பெண் சமுதாயத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சுசீந்திரத்தில் அவருக்கு சிலை அமைக்க முன்வந்தமைக்கு என் குடும்பத்தின் சார்பாகவும், கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், தமிழ் மக்களின் சார்பாகவும், தமிழ்மீது பற்று கொண்ட அனைவரின் சார்பாகவும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று ஏற்கெனவே பேசி பதிவு செய்திருக்கின்றார்கள். எனவே, தமிழுக்குப் பெருமை சேர்க்கும்வகையில், அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இதனைப் பரிசீலித்து ஆவன செய்யும் என்பதனை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் ஏற்கெனவே இருக்கிறது.* 10½ *சென்ட், அதற்கு மேல் ஒரு* ¾ *சென்ட் வழிப் பாதையும் இருக்கின்றது. இடம் இருப்பதால் நீங்கள் இதனை பரிசீலனை செய்ய வேண்டும். அதேநேரம், காப்புக்காடு என்ற அந்த ஊரினுடைய பெயரும் தொல்காப்பியர் என்ற பெயரிலிருந்தே, அமைந்திருக்கிறது. ஆகையால், நிரூபிக்கப்பட்ட ஒன்றாக இருப்பதால், நிச்சயமாக அங்கு மணிமண்டபமும் மற்றும் சிலையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தை அடுத்து இரவிபுதூர் கிராமத்தில் பிறந்து, சுதந்திரப் போராட்டத்திற்காகவும், மொழிப் போருக்காகவும் போராடி இன்னுயிர் நீத்த திரு. காந்திராமன் அவர்களுக்கு இரவிபுதூர் சந்திப்பு, அரசு புறம்போக்கு நிலத்தில் O.H.T.–*க்கு அருகே சிலையும், மணிமண்டபமும் அமைக்க அரசு முன்வர வேண்டும். அதேநேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில், களியக்காவிளை பகுதியில் தியாகி சிதம்பர நாதன் நாடார் அவர்களின். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பெரிய பட்டியலே எழுதிக் கொண்டு வந்து படித்தால் நான் எப்படி கேள்வி நேரத்தை நடத்துவது? உட்காருங்கள், போதும் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அதற்கு பதில் சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *போதும் உட்காருங்கள்.* (குறுக்கீடு) *என்ன, நீங்கள் இப்படி செய்கிறீர்கள்?* (குறுக்கீடு) *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) *கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரநாதன் அவர்கள் சிலையும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் சிலையும்* Highway–*ல் இருக்கிறது என்று சொல்லி, பேரூராட்சி அலுவலகத்தில் மாற்றி வைத்திருக்கிறார்கள். ஆனால், மக்கள் மத்தியில் அந்த சிலை அங்கு இருப்பது தெரியவில்லை. அரசு விழா எடுக்கிறார்கள். இருந்தாலும், மக்கள் யாருக்கும் அது சென்றடையவில்லை. மார்ஷல் நேசமணி மற்றும் ஜீவா போன்றோருடைய சிலைகளை மணிமண்டபம் அமைத்து* main–*ல் வைத்திருக்கிறீர்கள்.*

2017 ஜூலை 7]

அதைப்போல மணிமண்டபம் அமைத்து, இந்தச் சிலைகளையும் ஒரு main ஆன இடத்தில் வைப்பதற்கு அரசு முன்வர வேண்டும். மார்ஷல் நேசமணியின் மணிமண்டபத்தில் தியாகிகளுடைய படங்களை வைத்திட வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அரசு விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது என்று சொல்கின்றார். ஆண்டுதோறும் அரசு விழாக்கள் மார்ஷல் நேசமணி அவர்களுக்கும், மொழிப் போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிதம்பரநாதன் திருவுருவச் சிலையைப்பற்றி சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 12–9–2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ், 'கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு இணைய போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு களியக்காவிளையில் திருவுருவச் சிலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று தெரிவித்ததைத் தொடர்ந்து, அன்னாருக்கு கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் 8.50 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை அமைக்க அரசாணை வெளியிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் 8–2–2016 அன்று திறந்து வைக்கப்பட்டது என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைகளை அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் திலகம் சிவாஜி அவர்களுக்காக மணிமண்டபம் கட்டப்பட்டு வருகிறது. அந்தப் பணி விரைவில் முடிந்து திறக்கப்படும்பொழுது, அந்த மண்டபத்தில் நடிகர் திலகம் சிவாஜியின் புகைப்படங்களோடு, தந்தை பெரியார்,

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கர்மவீரர் காமராஜர், மூதறிஞர் இராஜாஜி மற்றும் இந்தியத் தலைவர்கள் மட்டுமல்லாமல், உலகப் புகழ் பெற்ற நடிகர்களோடு அவர் இருக்கின்ற புகைப்படங்களையும், பல்வேறு மேதைகளோடு அவர் நெருக்கமாக இருந்த புகைப்படங்களையும் அங்கே காட்சிக்காக வைக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம்.

அதுமட்டுமல்லாமல், அரசு திரைப்படக் கல்லூரியிலே பல பயிற்சிகள் இருந்தன. Direction, Cinematography, Editing courses எல்லாம் அங்கு இருக்கின்றன. ஆனால், நடிப்புப் பயிற்சி இப்போது இல்லை. ஆகவே, நடிப்பின் இலக்கணமான நடிகர் திலகம் சிவாஜி அவர்களுடைய மணிமண்டபத்திலே, நடிப்புப் பயிற்சிப் பட்டறை ஒன்று அமைக்க வேண்டுமென்பதும் எங்களுடைய விருப்பம். ஏனென்றால், 1952–க்குப் பிறகு வந்த என் போன்ற சினிமா நடிகர்களுக்கெல்லாம் தலைவர் கலைஞருடைய கனல் தெறிக்கும் வசனங்களும், (மேசையைத் தட்டும் ஒலி) சிவாஜி அவர்கள் திரைப்படங்களில் பேசிய கம்பீரமான அந்தக் குரலும்தான் நடிப்புப் பயிற்சியாக இருந்தது. ஆகவே, அவற்றையும் அந்த மணிமண்டபத்திலே அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், வழக்கு மன்றத்திலே ஒரு வேண்டுகோளை இந்த அரசுக்கு வைத்திருக்கிறது நீதிமன்றம். இலட்சக்கணக்கான மக்கள் பார்க்கின்ற வகையில் கடற்கரைச் சாலை சந்திப்பிலே தலைவர் கலைஞர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற சிவாஜி சிலையை, மணிமண்டபத்திலே வைக்க வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்பட்டால், அப்படி ஒரு முடிவை அரசு எடுத்தால், அது தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, தலைவர் கலைஞர் அவர்கள் வைத்ததுபோல, பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்க்கும் விதத்திலே, சிவாஜி சிலையை சென்னை நகரிலே, எங்காவது ஒரு முக்கிய சாலையிலே வைத்திட வேண்டும்; அதேபோன்று, மணிமண்டபத்தையும், சிலையையும் ஒரே நாளிலே திறக்க வேண்டுமென்பது திரையுலகில் இருக்கிற ஒட்டுமொத்தக் கலைஞர்களுடைய விருப்பம் என்பதைப் பணிவன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமருகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2017 ஜுலை 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள், இந்தக் கோரிக்கையை சென்ற ஆண்டு, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது பேசினார்கள். அன்றைக்கு மனித தெய்வமாக வாழ்ந்து, இன்றைக்கு விண்ணுலகிலே தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களே எழுந்து அதற்கு பதிலளித்தார்கள். "நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சிலை வைப்பதுபற்றி வழக்கு இருக்கின்றது. நீங்கள் வேண்டுமானால், அந்த வழக்கோடு இணைந்து ஒரு வழக்கைப் போடுங்கள்" என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினருக்கே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரை செய்தார்கள். அந்தவகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 26–8–2015 அன்று நடைபெற்ற இதே சட்டப் பேரவைக் கூட்டத்திலே, சட்டப் பேரவை விதி 110–ன்கீழ், "நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் ஒரு மணிமண்டபம் அமைக்க தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு தமிழக அரசால் மணிமண்டபம் கட்டப்படும்" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்தார்கள்.*

மேற்கண்ட அறிவிப்பைச் செயல்படுத்தும் பொருட்டு, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவாக சென்னை, மயிலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டம், அடையாறு பகுதி, ஆந்திர மகிள சபா மருத்துவமனைக்கு அருகிலுள்ள புல எண் 4669/3–ல், ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் ஒரு மணிமண்டபம் அமைக்க அரசாணை (நிலை) எண் 42, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள் 23–2–2016–ல் அரசாணை வெளியிடப்பட்டது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் மணிமண்டபக் கட்டுமானப் பணிகள் தற்போது பொதுப் பணித் துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு, கிட்டத்தட்ட நிறைவடைந்து, திறக்கப்படும் தருவாயில் இருக்கின்றது. விரைவிலே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அத்தனை கருத்துகளையும் அதிலே பிரதிபலிக்கும் வண்ணமாக, அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சருடைய

ஆலோசனையைப் பெற்று மிகவும் சிறப்பாக விழா நடத்தப்பட்டு நிச்சயமாக விரைவிலே அது திறக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுபோக, எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். இந்தியாவிலேயே அரசின் சார்பாக திரைப்படப் பயிற்சிக் கல்லூரிகள் இருக்கின்ற 3 மாநிலங்களில், தமிழகத்தில் சிறப்பாக இயங்கி வருகின்றது. எந்த மாநிலத்திலும் அரசு திரைப்படக் கல்லூரியில் இல்லாத வகையில், காலத்திற்கேற்றாற்போல், நவீன காலத்திற்கு ஏற்றவாறு மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இப்போது Animation Course இருக்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற சிறப்பைப் பெற்று, மிகச் சிறப்பாக (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரிலுள்ள அந்த அரசு திரைப்படக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

157—

தனி வட்டம்

*__12984—திரு. சோ. மாரியப்பன் கென்னடி:__

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து சாலை கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,